இந்தப் பிரச்சினையை எழுப்புவோம் என்று நீங்கள் எதிர்பார்த்திருந்தீர்களோ என்னவோ என்று நினைத்தேன். நன்றி அறிவிக்கும் தீர்மானம் தோற்றுப் போனால் என்ன நிலைமை ஏற்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது அறிமுகப்படுத்துவது முறைதான்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவைப்" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது.

(ஆ) கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்தச்)சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.